# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண்.72/2018**

பெயர்: **முத்துக்குமரன்** நாள்: 13.02.2026

வா.சா.1 – 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – முத்துக்குமரன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம்.11:05 AM

நான் இந்த வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரிதான். தாவா சொத்தானது இடங்கணசாலை கிராமம், சர்வே எண். 682/6A, 6/B-ல் உள்ளது என்றால், சரிதான். இதில் சர்வே எண். 682/6A-வில் மொத்த விஸ்தீரணம் 37 செண்டும், 6B-ல் உள்ள விஸ்தீரணம் 44 ¼ செண்டும் உள்ளது என்றால், அதை பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்கூறிய 2 சர்வே எண்களின் விஸ்தீரணத்தில் 30 ¼ செண்டு நிலம் சம்மந்தமாக மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரிதான். இதில் சர்வே எண். 682/ 6A என்னுடைய தாத்தா வைத்தியகவுண்டருக்கும் 6B ஒரு ராமலிங்கம் என்பவருக்கும் சொந்தம் என்றால், சரிதான். மேற்கூறிய 2 சர்வே எண்களும் அருகருகே உள்ளன மற்றும் இருவரின் அனுபவத்திற்கு வசதியாக இல்லை என்பதால் இராமலிங்கம் குடும்பத்தினரிடம் பரிவர்த்தனை பத்திரம் வா.சா.ஆ.1 ஆக ஏற்படுத்திக் கொண்டோம் என்றால், சரிதான். மேற்கூறிய பத்திரத்தின்படி, சர்வே எண். 682/6B-ல் ஒரு பகுதி நிலம் எங்களுக்கும், 682/6A ஒரு பகுதி நிலம் இராமலிங்கம் குடும்பத்தாருக்கும் ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். இந்த பத்திரத்தை ஏற்படுத்தி கொண்டது ஒரு வைத்தியகவுண்டரின் வாரிசுகளான 1. கணேசன் 2. அம்மாசி 3. முத்துசாமி 4. சித்ரா, 5. சாந்தி என்றால், சரிதான். 2-ம் பிரதிவாதி சித்தையன் என்பவர் 1-ம் பிரதிவாதி கணேசனின் மாமனார் என்றால், சரிதான். வழக்கு நிலுவையில் இருந்தபோது 2-ம் பிரதிவாதி இறந்ததால் அவர்களின் வாரிசுகளை இந்த வழக்கில் 3 முதல் 6 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், சரிதான். என்னுடைய வழக்குரையில் பிரதிவாதிகளை சேர்த்துள்ள என்ற விவரத்தை கூறியுள்ளேனா என்றால், தாவா சொத்து சம்மந்தமாக 2-ம் பிரதிவாதி அவருடைய பெயரில் பத்திரம் ஏற்படுத்திக் கொண்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அது என்ன பத்திரம் என்ற விவரம் எனக்கு தெரியுமா

என்றால், தெரியாது, பத்திரத்தின் விவரம் என்னவென்றே தெரியாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். எனக்கு அனைத்து விவரமும் தெரியும் என்றும், அனைத்து சங்கதிகளையும் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இராமலிங்கம் குடும்பத்தாருடன் ஏற்படுத்திக் கொண்ட பரிவர்த்தனையின் தேதியன்றே என்னுடைய குடும்பத்தார் அனைவரும் 2-ம் பிரதிவாதி சித்தையனுக்கு தாவா சொத்து குறித்து பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால், சரியல்ல. நானும் பொது அதிகார பத்திரத்தின் ஒரு தரப்பினர் என்றும், அதில் நான் 10 வது நபர் இளவராக காட்டப்பட்டுள்ளேன் என்றால், சரியல்ல. எனது பாட்டி பழனியம்மாளும் அவருடைய வாரிசுகள் மொத்தம் 24 பேர்கள் சேர்ந்து பொது அதிகார பத்திரத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால், அதை பற்றி தெரியவில்லை. பொது அதிகாரம் பெற்றவர் என்ற முறையில் 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதிக்கு 29.08.2003-ம் தேதியின்று தாவா சொத்து குறித்து கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளார் என்றால், சரியல்ல. அன்றைய தேதியிலிருந்து 1-ம் பிரதிவாதி தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல, எனது பாட்டியும், நானும் குடியிருந்து வந்தோம். எனது பாட்டியின் இறப்பிற்கு பிறகு நானும் எனது குடும்பத்தாரும் குடியிருந்து வருகிறோம். தாவா சொத்தின் ஒரு பகுதியில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேனா என்றால், முழுமையாக நான்தான் அனுபவித்து வருகிறேன். நான் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றும், அதனை நான் அனுபவிக்கவில்லை என்றும் சொன்னால், சரியல்ல. இந்த வழக்கில் நான் தாவா சொத்தில் உள்ள வீட்டின் முன்பு நின்று போட்டோ எடுத்து இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் நல்லெண்ணம்பட்டி மாரியம்மன் கோவில் பின்புறம் தான் வசித்து வருகிறேன் என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண் என்ன என்றால், 9/61 ஆகும். வீடு சேலம் மெயின் ரோட்டில் உள்ளது என்றால், சரிதான். நான் நல்லெண்ணம்பட்டியில் தான் வசித்து வருகிறேன் என்றும், தாவா சொத்தில் சுவாதீனத்தில் உள்ளேன் என்பதை நிரூபிக்க ஆவணம் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மேற்கூறிய கதவு எண்.9/61-க்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால், சரியல்ல. எனது குடும்பத்தில் அதிக உறுப்பினர்கள் உள்ளதால் நாங்கள் ஒன்று சேர்ந்து வந்து தாவா சொத்தில் 1-ம் பிரதிவாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்ததால் இந்நீதிமன்றத்தில அசல் வழக்கு எண். 57/2011

என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய அசல் வழக்கு எண். 57/2011 தீர்ப்பாகியிருப்பது என்றும், அந்த வழக்கின் தரப்பினர்கள் அல்லாதவர்கள் இடையூறு செய்யதால் நிறைவேற்று மனு எண். 24/2016-ஐ 1-ம் பிரதிவாதி தாக்கல் செய்து அதை 13.12.2017-ம் தேதியன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய வழக்கு நடவடிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக என் குடும்பத்தை சார்ந்தவர்கள் அசல் வழக்கு எண். 214/2012, 217/2012 என்ற வழக்குகளை தாக்கல் செய்துள்ளோம் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண்.214/2012-ல் நான் 4-ம் வாதி என்றால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அந்த வழக்கில் 1, 2 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றும் 23.06.2017-ம் தேதியன்று அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. அ.வ.எண். 217/2012 வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. 1-ம் பிரதிவாதி தாவா சொத்தில் அனுபவத்தில் உள்ளதால் அவர் ஜெயவேல், செல்லப்பன் ஆகியோர்களிடம் கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தி கொண்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. மேற்கூறிய கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றி கொடுக்க கூறி ஏற்றுதல் ஆற்றுக பரிகாரம் கோரி ஜெயவேல் மற்றும் செல்லப்பன் ஆகியோர்கள் 1-ம் பிரதிவாதிக்கு எதிராக அ.வ.எண்.272/2010 என்ற வழக்கை தாக்கல் செய்து அதில் 1-ம் பிரதிவாதிக்கு எதிராக தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவர் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. மேற்கூறிய பத்திரத்தின் விவரங்கள், தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்குகள் பற்றி அனைத்தும் எனக்கு தெரிந்தும் இந்த வழக்கிற்காக எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் வாதியாக இருந்த வழக்கில் ஜெயவேல் மற்றும் செல்லப்பன் ஆகியோர்களை 8, 9-ம் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கை அனைத்து உண்மை சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. மேற்கூறிய பத்திர விவரங்கள், வழக்கு விவரங்களை பற்றி என்னுடைய வழக்குரையில் கூறினால் என்னுடைய வழக்கிற்கு எதிராக அமையும் என்பதால், நான் எதையும் கூறாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனக்கும் என்னுடைய தகப்பனாருக்கும் சுமூகமான உறவு இல்லை என்று கூறுவது என்றும்,

இருவரும் ஒரே வீட்டில் தான் வசித்து வருகிறோம் என்றால், சரியல்ல. இந்த வழக்கை சட்டப்படி அல்லாமல் தாவா சொத்திலிருந்து என்னை வெளியேற்றக்கூடாது என்ற பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேனா என்றால், சரிதான். எனக்கு அனைத்து விவரங்களும் தெரிந்ததால் தான் இந்த பரிகாரத்தை கோரியுள்ளேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் பெறக்கூடிய தீர்ப்பின் அடிப்படையில் இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்புகளை செயல்படுத்தாமல் இருப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது குடும்பத்தாருடன் சேர்ந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த தாவா சொத்திற்கு 1-ம் பிரதிவாதிதான் உரிமையாளர் என்றும் அவருடைய சுவாதீனத்தில் தான் உள்ளது என்றும் அவருடைய அனுபவத்தின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. நான் உண்மையான உரிமையாளருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றும், இதற்குமுன்பு தாக்கல் செய்துள்ள வழக்கில் பெறப்பட்ட தீர்ப்பிற்கு எதிராக பரிகாரம் கோர இயலாது என்றால், சரியல்ல. உண்மைசங்கதிகளை மறைத்து இந்த வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை கூறி தாக்கல் செய்துள்ளேன் என்பதால் செலவுத்தொகையுடன் இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம்.12.03 **PM.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2026.02.13 13:09:34 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.